**செய்தி வெளியீடு எண்: 244** **நாள்:06.05.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசு **03.05.2021** அன்று வெளியிட்ட அரசாணை எண்.**364**–ல் புதிய கட்டுப்பாடுகள் **06.05.2021** முதல் **20.05.2021** வரை விதிக்கப்பட்டது. அதன்படி அரசு அலுவலகங்களில் அதிகபட்சமாக **50** விழுக்காடு பணியாளர்களை கொண்டு இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து துறையினை பொதுமக்கள்/ஓட்டுநர்கள் வாகன உரிமையாளர்கள் தங்களது சேவைகளுக்கு போக்குவரத்து அரசு அலுவலகங்களுக்கு வந்து பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் தொடர்பான இதர பணிகளுக்கு பயன்பெற்று வருகின்றனர்.

**50** விழுக்காடு அரசு பணியாளர்களுடன் ஓட்டுநர் உரிமம் தொடர்பான அனைத்து பணிகளின் சேவைகளை கொரோனா நோய் தொற்று பரவாமல் செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு விண்ணப்பதாரர்களை சாரதி இணைய தளத்தில் **50** விழுக்காடுகள் வரை முன்பதிவுகள் பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளன.

பழகுநர் உரிமம் வழங்குவதில் **40** விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு **40** விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

ஓட்டுநர் உரிமம் தேர்வில் **30** விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

கொரோனா நோய் தொற்றை பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழிமுறைகளுடன் பொது மக்களுக்கு சேவையாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமை செயலாளர்/போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**